# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8102103

1. District மாவட்டம் : சிவகங்கை  PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு சிவகங்கை  Year: ஆண்டு 2022  FIR No.: மு.த.அ. எண் 04/2022  Date: நாள் 31.05.2022

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம் (திருத்தம்) 2018  Sections பிரிவுகள்: 7(a)

   (ii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல் 18.05.2020  Date to : நாள் வரை 26.05.2020

   Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல்  Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 31.05.2022  Time : நேரம் 1800 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் V01-I  Time : நேரம் 1800 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக  On petition

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் தென் மேற்கில் சுமார் 50 கி.மீ தொலைவில்

   Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி சார்பதிவாளர் அலுவலகம், திருப்புவனம், சிவகங்கை மாவட்டம்.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் -  District : மாவட்டம் -

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் கு.ராமச்சந்திரன்  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் R. குமாரவேலு

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 25.07.1971  (d) Nationality : நாட்டினம் இந்தியன்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் காவல் துணைக் கண்காணிப்பாளர்  (g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர், (கூ.பொ) சிவகங்கை.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திருமதி. K. ஆனந்தராணி, க/பெ. R. சரவணக்குமார், முன்னாள் சார்பதிவாளர், திருப்புவனம் சார்பதிவாளர் அலுவலகம், சிவகங்கை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   After completion of preliminary Enquiry

* GCP 240-34(Type-2) 90.000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet Attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed K. Ramanan Inspector of Police Rank ........ to take up the Investigation / Refused Investigation / transferred to PS V&AC, Sivaganga ........on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............ பதவி ............ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

(signature) 31.05.22

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
31.05.2022 at 2100hrs

Name: பெயர் K. RAMACHANDRAN
DSP
Rank: நிலை ............No. எண் .........
V&AC, VIRUDHUNAGAR
(I/c) SIVAGANGAI

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

சிவகங்கை சிறப்பு நீதிபதி ஊழல் தடுப்பு சட்டம்(திருத்தம்) 2018 நீதிமன்றம் முன்பாக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நான் இன்று 31.05.2022 மாலை 18.00 மணிக்கு சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் பணியில் இருந்தபோது திரு.R.வெங்கடேஸ்வரன் என்பவரின் 27.05.2020 நாளிட்ட மனு அடிப்படையில், சென்னை, பதிவுத்துறை தலைவர் அவர்களின் கடிதம் எண்.17258/V3/2020, நாள் 23.10.2020–இன்படி முன் அனுமதி பெறப்பட்டு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரக குறிப்பாணை எண் மு.வி.88/2020/REGN/SG, நாள்.23.11.2020–இன்படி காலம் 7–இல் கண்டுள்ள குற்றச்சாட்டு அலுவலர் மீதுள்ள குற்றச்சாட்டு தொடர்பான முதனிலை விசாரணையின் தொடர்ச்சியாக, இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை அவர்களின் குறிப்பாணை எண். PE.88/2020/REGN/SG, Dt:09.05.2022-இன்படி காலம் 7–இல் கண்ட குற்றச்சாட்டு அலுவலர் மீது சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.4/2022, சட்டப்பிரிவு 7(a) ஊழல் தடுப்பு சட்டம் (திருத்தம்) 2018–இன்படி பதிவு செய்யப்பட்ட வழக்கின் விபரம் பின்வருமாறு:

கு.சா.அ. திருமதி.A.ஆனந்தராணி என்பவர் ஊழல் தடுப்பு சட்டம் 1988 பிரிவு 2 (c)–இன்படி பொது ஊழியர் ஆவார். இவர் சிவகங்கை மாவட்டம், திருப்புவனத்தில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்தில் 17.09.2018 ஆம் தேதி முதல் 30.06.2021 ஆம் தேதி வரை சார்பதிவாளராக பணிபுரிந்துள்ளார். இவர் மீது குற்ற வழக்கு பதிவு செய்ய சட்டப்பிரிவு 17(A) ஊழல் தடுப்பு சட்டம் (திருத்தம்)–2018–இன் படி, சென்னை, பதிவுத்துறை தலைவர் அவர்களிடமிருந்து கடிதம் எண்.17258/V3/2020, நாள்–30.12.2021 பிரகாரம் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது.

திரு.R.வெங்கடேஸ்வரன் என்பவரின் 27.07.2020 நாளிட்ட புகாரின் விவரம் பின்வருமாறு, நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வழக்கறிஞர் தொழில் செய்து வந்து தற்போது கொரோனா பிரச்சனை காரணமாக எந்த வேலையும் இல்லாமல் வீட்டில் இருந்து வந்த இந்நிலையில் மதுரை–625 007, மதுரை வடக்கு, ஆத்திகுளம், கங்கை தெரு, கதவு எண்.5/393 என்ற விலாசத்தில் வசிக்கும் செல்வக்குமார அவர்களின் மனைவி வள்ளி என்பவர் என்னை வழக்கறிஞர் என்ற முறையில் தொடர்பு கொண்டு அவர் சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு உட்பட்ட மாங்குடி கிராமத்தில் உள்ள ச.ராமன் அவர்களின் மகன் மோகன்ராஜ் என்பவருக்கு சொந்தமான 47 செண்டு நன்செய் நிலத்தை சுத்தகிரையம் வாங்க இருப்பதாகவும் அந்த கிரைய பத்திரத்தை என்னை தயார் செய்து பதிவு செய்ய உடன் இருந்து உறுதுணையாக இருக்குமாறும் கேட்டுக்கொண்டார். அதன்படி நான் கிரைய பத்திரம் தயாரித்து தரப்பினர்கள் மற்றும் சாட்சிகள் கையொப்பம் பெற்று பதிவு செய்ய 18.05.2020ம் தேதி காலை 12.00 மணியளவில் திருப்புவனம் சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளராக உள்ள கிரைய பத்திர பதிவுக்கு பின்னர் கிரைய பத்திர 11வது தாளை பார்த்து பெயர் தெரிந்துகொண்ட ஆனந்தராணி.அ என்பவர் முன்னிலையில் கிரையப்பத்திரம் பதிவு செய்ய வேண்டி முறைப்படி பதிவு செய்ய தேவையான வில்லங்க சான்று, பட்டா நகல், ஆன்லைனில் பதிவு கட்டணம் கட்டியதற்கான ரசீது, போதிய முத்திரைத் தீர்வை ஆகியவற்றுடன் மேற்படி கிரையப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு முந்தைய

ஆவணத்தின் அசல் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு எடுத்து வர மறந்துவிட்டதால் பத்திர தரப்பினர் மோகன்ராஜ மாங்குடி சென்று எடுத்து வந்து பத்திர பதிவு தொடரப்பட்டு மாலை சுமார் 4.00 மணியளவில் தரப்பினர்கள் புகைப்படம், கைரேகை எடுக்கப்பட்டது அதன் தொடர்ச்சியாக ஆன்லைனில் முன்பதிவு செய்யும்போதே பத்திரம் திரும்பப் பெறுபவர் பெயரில் எனது பெயர் மற்றும் விலாசம் பதிவேற்றம் செய்யப்பட்டதால் பத்திர அலுவலகத்தில் எனது கை ரேகை மற்றும் புகைப்படமும் எடுக்கப்பட்டு பத்திர பதிவு நிறைவு செய்யப்பட்டது. அதன் பின்னர் மேற்படியான சொத்தின் முந்தைய ஆவணம் வில்லங்கத்தில் வராதது சம்பந்தமாக மேற்படி நிலத்தை விற்கும் மோகன்ராஜ பெயரில் வில்லங்க தவறை சரிசெய்ய வேண்டி மனு கொடுத்து விட்டு மேற்படி பதிவு செய்ய தாக்கல் செய்த கிரைய பத்திரத்தை அதிக நேரம் காத்திருக்க வேண்டி இருக்கும் என்பதால் மற்றொரு நாள் திரும்ப பெற்றுக்கொள்ளலாம் என்று எண்ணி நாங்கள் அங்கிருந்து புறப்பட ஆரம்பித்த நிலையில் மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் மா நிறம் கொண்ட, சிறிது குண்டான, 30–35 வயது மதிக்கத்தக்க அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத பெண் ஊழியர் என்னை சார்பதிவாளர் அலுவலகத்திற்குள் அழைத்து வேறு மாவட்டத்தில் இருந்து நீங்கள் இங்கு வந்து பதிவதால் பத்திர பீஸ் (லஞ்சம்) கொடுக்கணும் என்றும் அது இல்லாமல் கொடி பீஸ் கொடுக்கணும் என்றும் என்னிடம் வாதாடினார். அதற்கு நான் ஏன் மேடம் நாங்களே கொரோனா னால ரொம்ப நொந்து போய் இருக்கோம் என்று சொல்ல அதற்கு அவர் பாத்துக்கங்க அடுத்து அடுத்து நீங்க வரனும் உங்க வேலை அடுத்து நடக்காது என்று கூறினார். இந்த சமயத்தில் சார்பதிவாளர் பத்திரங்கள் பதிவில் மும்புரமாக இருந்ததால் அந்த பெண் ஊழியரிடம் மட்டும் நான் வருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். மேற்படியான பெண் ஊழியரை என்னால் அடையாளம் காட்ட முடியும். பின்பு மேற்படி நிலம் வாங்கிய வள்ளி என்னை திருப்புவனம் சார்பதிவாளர் அலுவலகம் சென்று பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரத்தை பெற்று வர வேண்டியதன் அடிப்படையில் நேற்று 26.05.2020ம் தேதி நான் காலை 10.30 மணியளவில் திருப்புவனம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று அங்கு இருந்த இத்துடன் இணைக்கப்பட்டுள்ள CD வீடியோவில் உள்ள வெள்ளையாக ஒள்ளியாக, வழத்தியாக சுமார் 20–25 வயது மதிக்கத்தக்க பெண் ஊழியரிடம் ஒப்புகை சீட்டை கொடுத்து இதற்குண்டான பதிவு முடிக்கப்பட்ட கிரைய பத்திரம் கொடுக்குமாறு கேட்டதற்கு சிறிது நேரம் பொறுங்கள் சார்பதிவாளர் வந்துவிடுவார் என்று கூறினார். அதனால் நான் சிறிது நேரம் காத்திருந்தேன் பின்னர் சார்பதிவாளர் ஆனந்தராணி சுமார் 11.00 மணியளவில் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்தார். நான் மேற்படி ஒப்புகை சீட்டை மேலே சொன்ன பெண் ஊழியரிடம் கொடுத்து பத்திரத்தை எடுக்க வேண்டினேன். அந்த பெண் ஊழியர் அதற்குண்டான பத்திரத்தை எடுத்து ஆனந்தராணி சார்பதிவாளரிடம் கொடுத்தார். அந்த பத்திரத்தை பார்த்த சார்பதிவாளர் ஆனந்தராணி சொல்லுங்கள் என்று என்னிடம் கேட்கவே டாக்குமென்ட் ரிட்டன் வாங்க வந்தேன் மேடம் என்று நான் கூறியதற்கு அவர் என்னை பார்த்து இந்த பத்திரம் எழுதியதற்கு என்னனு (லஞ்சம்) வாங்கிட்டு வாங்க, பத்திரம் எழுதுறதுக்கு என்னனு (லஞ்சம்) கொடுக்கனும் ல, பத்திரம் கொடுக்கனும் ல, ஒன்னுமே தெரியாதா உங்களுக்கு என்று கூறினார். அதற்கு நான் கொரோனா பிரச்சினையாக உள்ளது என்று கூறினேன். அதற்கு அவர் கொரோனா பிரச்சனைனா நீங்க அவங்ககிட்ட வாங்காம இருக்கீங்களா என்று சொன்னார். அதற்கு நான் நாங்க பீஸ்

வாங்கவில்லை என்று கூறினேன். அதற்கு அவர் கொடியும் கொடுக்கவில்லை என்று சொன்னாங்க என்றார். கொடியை கொடுங்கள் என்று என்னை கட்டாயப்படுத்தினார். பிறகு சார்பதிவாளர் ஆனந்தராணி என்னிடம் வாடிப்பட்டி பாலகிருஷ்ணன் லாயர் அடிக்கடி வருவாரே உங்களுக்கு தெரியாதா ஒன்னும் சொல்லமாட்டாரா என்றார் அதற்கு நான் இல்ல மேடம் கொரோனா பிரச்சினை அதனால தான் என்று சொன்னேன். அதற்கு சார்பதிவாளர் ஆனந்தராணி கொரோனா பிரச்சனை அதுக்கும் இதுக்கும் (லஞ்சத்திற்கும்) என்ன இருக்கு பதியிரவங்க (லஞ்சம்) கொடுக்கதான் செய்றாங்க என்றார் அதற்கு நான் மேன்டேட்டரி இல்லையே மேடம் என்று சொன்னதற்கு அவர் நீங்க முதல்ல ரிட்டனே போடாக்கூடாது அவங்க தான் ரிட்டன் போடனும் நாங்க ரிட்டனே கொடுக்கமாட்டோம் நாங்க பார்ட்டிட தான் கொடுப்போம் நீங்க வரனும்னு அவசியமே கிடையாது என்று சொன்னார். அதனறு நான் ரிட்டன் ஆப்சன் இருக்கு ல மேடம் என்று சொன்னதற்கு அவர் ரிட்டன் டாக்குமெண்ட் ரைட்டர போடவே முடியாது, அன்னைக்கு டேட்க்கு ஈசி வைக்கனும் எல்லாமே பிராப்பரா வைக்கனும் இல்லைனா எந்த பத்திரமும் பதிய முடியாது என்று (இனி நான் சம்பந்தப்பட்ட டாக்குமெண்ட் பதியமாட்டோம் என்ற அர்த்தத்தை உள்ளடக்கி) என்னை மிரட்டினார். பின்னர் சிறிது நேரம் அங்கேயே நின்று கொண்டிருந்து கொடி ரூ.100/– மேற்படி பெண் ஊழியரிடம் கொடுத்துவிட்டு தேதி எழுதாமல், பெயர் எழுதாமல் ஏற்கனவே கையொப்பம் மட்டும் இடப்பட்டிருந்த படை வீரர் கொடி நாள் 2019 நிதி இரசீது என்று தலைப்பிடப்பட்ட ரூ.50/– என்று அச்சிடப்பட்ட ரசீது எண்கள்: 882097, 882098 என்ற ரசீது எண் கொண்ட இரண்டு ரசீதுகளை மேற்படி பெண் ஊழியர் என்னிடம் வழங்க நான் அதனை பெற்றுக்கொண்டும், கிரைய பத்திரத்தை பெற்றுக் கொண்டும் பிறகு பட்டா மாறுதல் செய்ய ஆன்லைன் ரசீதை சார்பதிவாளர் தருவது குறித்து சார்பதிவாளர் ஆனந்தராணியிடம் கேட்டுவிட்டு பின்னர் சார்பதிவாளர் ஆனந்தராணி எனது பெயரை கேட்க நான் வெங்கடேஸ் என்று கூறிவிட்டு வெளியே வந்தேன். மேற்படியான 26.05.2020 மதேதி நடந்த சம்பவங்கள் அனைத்தையும் நான் என்னுடைய வெள்ளை நிற Vivo V5 போனில் வீடியோ பதிவு செய்தேன். மேற்படி எனது Vivo V5 போனை நான் தங்கள் முன்பு விசாரணைக்காக தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். மேலும் மேற்படி வீடியோ பதிவை DVD யில் பதிவு செய்து இத்துடன் தங்களுக்கு அனுப்புகிறேன். மேலும் சம்மந்தப்பட்ட ஆவணங்களையும் இத்துடன் இணைத்து தங்களுக்கு அனுப்புகிறேன். அவரே ஒப்புக்கொண்டுள்ளார். இந்த வாக்குமூலம் அவர் செய்த லஞ்ச குற்ற செயல்களை ஒப்புக்கொள்ளும் தன்னிச்சையான குற்ற ஏற்புரை (Confession) ஆகும். தாங்கள் என்னை அழைக்கும் பட்சத்தில் தங்களின் விசாரணைக்கு தங்கள் முன்பு நான் ஆஜராக தயாராக உள்ளேன். ஆகவே மேற்படியான லஞ்ச குற்றம் செய்த மேற்படி லஞ்ச பேர்வழியான திருப்புவனம் சார்பதிவாளர் ஆனந்தராணி மீதும் மேலும் மேலே நான் குறிப்பிட்ட மா நிறம் கொண்ட, சிறிது குண்டான, 30–35 வயது மதிக்கத்தக்க அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத பெண் ஊழியர் மீதும் The Prevention of Corruption Act, 1988 சட்டத்தின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து உரிய மேல் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு ஒம்.XXXXXXX (R.வெங்கடேஸ்வரன்).

பத்திரப்பதிவு செய்து ஆவணம் வழங்குவதற்கு லஞ்சம் கேட்ட திருப்புவனம் சார்பதிவாளர் திருமதி.ஆனந்தராணி என்பவர் மீது, சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரக குறிப்பாணை எண்.மு.வி.88/2020/REGN/சிவ, நாள்.23.11.2020–இன்படி முதற்கட்ட விசாரணை பதிவு செய்யப்பட்டு, விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. முதற்கட்ட விசாரணையில் மனுதாரர் திரு.வெங்கடேஸ்வரனிடம் குற்றச்சாட்டு அலுவலர் திருமதி.ஆனந்தராணி, சார்பதிவாளர் கையூட்டு கேட்டதற்கான முகாந்திரம் இருந்துள்ளது. ஆகையால் கு.சா.அ. திருமதி.ஆனந்தராணி மீது குற்ற வழக்கு பதிவு செய்ய வேண்டி ஊழல் தடுப்பு சட்டம் (திருத்தம்) 2018–இன்படி துறைத்தலைவரிடம் முன் அனுமதி பெறப்பட்டு, திருமதி.ஆனந்தராணி, முன்னாள் சார்பதிவாளர், திருப்புவனம் சார்பதிவாளர் அலுவலகம், சிவகங்கை மாவட்டம் என்பவர் மீது சட்டப்பிரிவு 7(a) ஊழல் தடுப்பு சட்டம் (திருத்தம்)–2018–இன்படி வழக்குப் பதிவு செய்யப்படுகிறது.

இவ்வழக்கின் அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் திரு.R.வெங்கடேஸ்வரன் என்பவரது 27.05.2020 தேதியிட்ட மனு மற்றும் CD ஆகியவற்றை கணம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றம், சிவகங்கை அவர்களுக்கு அனுப்பியும், ஒரு நகலை புலன்விசாரணை அதிகாரிக்கு கொடுத்தும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட மேல் அதிகாரிகளுக்கு அனுப்பியும் வைக்கப்பட்டது.

31.05.22

(கு.ராமச்சந்திரன்)
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு,
விருதுநகர், (கூ.பொ.) சிவகங்கை.